Alpha

இயேசு

ஏன்?

நிக்கி கம்பெல்

இயேசு ஏன்?

PLEASE
BUY
THIS
BOOK!

நிக்கி கம்பெல்

Alpha

Alpha Malaysia
www.alpha.org.my

Copyright © Nicky Gumbel 1991
The right of Nicky Gumbel to be identified as author of this work has been asserted by him in accordance with the Copyright, Designs and Patents Act 1988.

First published by Kingsway Publications Ltd in 1991.
Reprinted 1991, 1992, 1993 (twice), 1994 (twice), 1995 (twice), 1996 (twice), 1997 (three times).

This edition in Tamil is published by Alpha International 1997.
Reprinted 1998 (five times), 1999 (five times), 2001, 2003

All rights reserved.
No part of this publication may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopy, recording, or any information storage and retrieval sýstem, without permission in writing from the publisher.

Biblical quotations are from the New International Version, © 1973, 1978, 1984 by the International Bible Society.
Inclusive language version.

ISBN: 978-981-08-8149-8

Published by AAP Publishing Pte Ltd
www.alpha.org

Distributor: Canaanland Distributors Sdn Bhd
Address: No. 25 Jalan PJU 1A/41B, NZX Commercial Centre,
Ara Jaya, 47301 Petaling Jaya, Selangor, Malaysia
Telephone: +603 7885 0540/1/2 (3 line)
Email: info@canaanland.com.my
Webside: www.canaanland.com.my

Illustrations by Charlie Mackesy.

இவை எல்லாம் எதைப்பற்றியது?

உறவுகள் களிப்பு மிக்கவை. நம் பெற்றோருடனும், தோழர்களுடனும், தோழிகளுடனும், கணவன் அல்லது மனைவியிடனும், பிள்ளைகளுடனும், பேரப்பிள்ளைகளுடனும் வைத்திருக்கும் உறவானது நம்முடைய வாழ்க்கையில் மிக முக்கியமான அம்சமாகும்.

கிறிஸ்தவத்தில், விதிமுறைகளைக் காட்டிலும் முதன்மையானதும், மிக முக்கியமானதுமானது உறவுமுறை ஆகும். அது ஒரு தத்துவத்தை உணர்த்த முயல்வதைக் காட்டிலும் ஒரு நபரைப்பற்றி உணர்த்தவே பெரிதும் முனைகிறது. அது, நம் எல்லா உறவுகளைக் காட்டிலும் மிகமுக்கியமான ஒரு உறவு - அதாவது, நம்மைப் படைத்த கடவுளோடு நாம் கொண்டிருக்கும் உறவு. முதன்முதலானதும், பிரதானமானதுமான கட்டளையாவது - கடவுளை நேசிப்பதே என்று இயேசு கூறினார். இரண்டாவதாக, நம் அருகிலுள்ளோரை நேசிக்க வேண்டும். ஆகையால், இது மொத்தமாகவே மற்ற மக்களோடு நாம் கொண்டிருக்கும் உறவைப் பற்றியதே.



அவர் நமக்கு ஏன் தேவை?

நீங்களும், நானும் தேவனோடு நல்ல உறவை வைத்துக்கொள்ளவே படைக்கப்பட்டோம். அந்த உறவை நாம் கண்டுபிடிக்கும்வரை, நம் வாழ்க்கையில் ஏதோ ஒன்றை இழந்தவர்களாகவே இருப்போம். அதன்விளைவாக ஒரு இடைவெளியை உணருகிறோம். ஒரு பாடகர் இதை

இப்படிப் பாடினார், 'என்னுள்ளே ஆழத்தில் ஒரு வெறுமை உள்ளதே', என்று. எனக்குக் கடிதம் எழுதிய ஒரு பெண் தன் அடியாழத்தில் வெறுமையாக உணர்வதாக எழுதியிருந்தார். மற்றொரு வாலிபப்பெண், 'தன்னுடைய ஆத்துமாவிலிருந்து ஒரு துண்டு காணாமற்போனதாக' சொன்னாள்.

மக்கள் இந்த வெறுமையை பல்வேறு வழிகளில் நிரப்ப முயற்சிக்கின்றனர். சிலர் பணத்தினால் இந்த இடைவெளியை மூடநினைக்கின்றனர். ஆனால், அது திருப்தியை தருவதில்லை. 'கோடிக்கணக்கான பணம் மட்டுமே மனிதன் வாழ்க்கைக்கு தேவையானவற்றை தந்துவிடாது' என்று உலகில் பணக்காரரில் ஒருவரான அரிஸ்டாட்டில் அனாசிஸ் குறிப்பிடுகிறார்.

மற்றவர்கள் போதைபொருட்களையும், அளவுக்குமேல் குடிப்பதும் அல்லது முறைகெட்ட பாலியல் நடவடிக்கைகளிலும் தங்களை ஈடுபடுத்திக்கொள்கின்றனர். 'இவை தற்காலிக திருப்தி அளிக்கிறது' என்று ஒரு பெண் என்னிடம் சொன்னாள். மற்றும் பலர் வெற்றியை காணத்துடிக்கின்றனர். இவற்றில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால், ஒவ்வொரு மனிதருக்கும் இருக்கிற உள்ளான பசியை நீக்க முடியாது.

ஒருவரோடொருவர் வைத்துக்கொள்ளும் மிகவும் நெருங்கிய உறவுகள்கூட இந்த உள்ளான வெறுமையை திருப்திபடுத்த முடியாது. நாம் தேவனோடு கொண்டிருக்கும் உறவு மட்டுமே இந்த இடைவெளியை நிரப்பமுடியும், அதற்காகவே நாம் படைக்கப்பட்டோம்.

புதிய ஏற்பாட்டின்படி, இந்த வெறுமைக்கு காரணம் மக்கள் தேவனுக்குத் தங்கள் முதுகை காட்டினதினால் (தேவனைவிட்டு தூரம் போனதினால்).

இயேசு சொன்னார் ஜீவ அப்பம் நானே (யோவான் 6:35). அவர் மட்டுமே நம்முடைய உள்ளான பசியை ஆற்ற முடியும். ஏனென்றால், அவர்தான் தேவனோடு நம்முடைய உறவைப் புதுப்பிக்கக்கூடியவர்.

அ) வாழ்க்கை அர்த்தமுள்ளதாயும், நோக்கமுள்ளதாயும் இருப்பதற்கான நம் பசியை அவர் திருப்திபடுத்துகிறார்.

ஒரு காலக்கட்டத்தில் எல்லாரும் கேட்பது, 'இந்த உலகத்தில் நான் என்ன செய்துகொண்டிருக்கிறேன், என்பது'? அல்லது 'வாழ்க்கையின் நோக்கம் என்ன'? அல்லது 'வாழ்க்கையில் ஏதாவது குறிக்கோள் இருக்கிறதா'? ஆல்பர்ட் கெமஸ் ஒருமுறை இவ்வாறு கூறினார், மனிதன் அர்த்தமில்லாத வாழ்க்கை வாழமுடியாது, என்று.

நாம் தேவனோடு உறவுகொள்ளாவிட்டால் வாழ்க்கையிலுள்ள அர்த்தத்தையும், நோக்கத்தையும் அறிந்துகொள்ளமாட்டோம். மற்ற காரியங்கள் சிறிதளவு திருப்தியை கொடுக்கலாம். ஆனால் அது நிலையானது அல்ல. நம்முடைய படைப்பாளருடன் உறவுகொள்ளும்போது மட்டுமே, நமக்கு வாழ்க்கையில் உண்மையான அர்த்தத்தையும், நோக்கங்களையும் கொண்டுவரும்.

ஆ) மரணத்திற்கு பின்வரும் வாழ்க்கைக்கும், அவர் நம்முடைய பசியை திருப்திபடுத்துவார்.

கிறிஸ்தவனாக நான் மாறுவதற்குமுன், மரணம் என்கிற தலைப்பை குறித்து நினைப்பதற்கே எனக்கு விருப்பம் இருக்காது. என் மரணத்திற்கு நீண்ட நாட்கள் இருக்கிறது என்று நான் நினைத்தேன். என்ன நடக்கும் என்பது எனக்கு தெரியாது. அதைக் குறித்து நான் யோசிக்கவும் விரும்பவில்லை. நடைமுறையில் நடக்கும் உண்மைகளை சந்திக்க தவறிவிட்டேன். உண்மை என்னவென்றால் நாம் எல்லாம் இறந்துப்போவோம். ஆனாலும், நித்தியத்தை தேவன் மனிதனுடைய இதயத்திலே வைத்தார் (பிரசங்கி 3.11). அநேகர் சாகவிரும்புவதில்லை. மரணத்திற்கு பிறகும் நாம் வாழவிரும்புகிறோம். இயேசு கிறிஸ்துவில் மட்டுமே நாம் நிரந்தர வாழ்வை கண்டடைய முடியும். இப்போது ஆரம்பமாகிற தேவனோடு நாம் கொண்டுள்ள உறவு, மரணத்தையும் கடந்து நித்தியத்திற்குள்ளாக நம்மை வழிநடத்திச் செல்லும்.

இ) மன்னிப்புக்கென்று அவர் நம் பசியை திருப்திபடுத்துவார்.

நாம் நேர்மையுள்ளவர்களாயிருந்தால், நாம் என்னென்ன தவறுகளை செய்கிறோம் என்று நமக்குத் தெரியும் என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். நாம் செய்கிற சில காரியங்களைக்குறித்து நாமே மிகுந்த வெட்கமடைகிறோம். நம்முடைய வாழ்க்கையில் சுயத்தை மையமாக கொண்டிருப்போமேயானால் கெட்ட விளைவுகளே உண்டாகும். இயேசு கூறினார் 'உனக்குள்ளாக இருந்து வெளியே வருவது உன்னை அசுத்தப்படுத்தும்' என்று. ஏனென்றால், உங்கள் இதயங்களிலிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். இந்த தீமைகள் உங்களுள் புறப்பட்டு வெளியே காணப்படும்போது உங்களை அசுத்தப்படுத்தும் (மாற்கு 7.20-23).

உண்மையில் நமக்கு பிரதான தேவை, மன்னிக்கப்படுவதுதான். கேன்சர் வந்தவருக்கு எப்படி, அவர் விரும்புகிறாரோ இல்லையோ, மருத்துவருடைய உதவி தேவையோ, அதேபோல நாம் விரும்புகிறோமோ இல்லையோ நமக்கு மன்னிப்பு தேவை. ஒருவர் தனக்கு கேன்சர் இருப்பதால் அதன் தேவைகளை அறிந்திருந்தாலும், அந்த கேன்சர் எனக்கு ஒன்றும் செய்யாது, நான் பாதுகாப்பாகத்தான் இருக்கிறேன் என்று சொல்லும் மற்றவரை காட்டிலும் மேலானவர். இயேசு சிலுவையில் மரித்ததினால் நமக்கு மன்னிப்பு கிடைத்ததது. அதோடு தேவனோடு நமக்குள்ள உறவு, நமக்கு மறுபடியும் கிடைத்ததது. இந்த வகையில், நம்முடைய ஆழமான தேவைக்குரிய பதிலை நமக்கு கொடுத்தார்.

இயேசுவைப்பற்றி ஏன் அக்கறை காட்டவேண்டும்?

கிறிஸ்துவத்துக்கு நாம் ஏன் அக்கறை காட்ட வேண்டும்? எளிதான பதில் என்னவென்றால், அது உண்மையுள்ளது. கிறிஸ்தவம் உண்மையற்றது என்றால், நம்முடைய நேரத்தை நாம் வீணாக்குகிறவர்களாய் இருப்போம். உண்மையென்றால், ஒவ்வொரு மனிதனுக்கும் அது மிகமுக்கியமானதாக இருக்க வேண்டும்.

அது உண்மை என்று நமக்கு எப்படி தெரியும்?

கிறிஸ்தவம், வரலாற்றுப்பூர்வமாக நம்பப்படுகிறதாகையால், நாம் உரிமை பாராட்டும் கிறிஸ்தவநம்பிக்கை பரிசோதிக்கப்பட்டது. இது, இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை மையமாகக் கொண்டது. நம்முடைய நம்பிக்கை திடமான வரலாற்று பூர்வமான ஆதாரங்களைக் கொண்டது.



இயேசு யார்?

இந்த உலகத்தில் வாழ்ந்தவர்களுள் மிகமுக்கியமான நபர், இயேசு நம்முடைய நாகரீக சீர்திருத்தத்தின் மையப்பொருள். கிறிஸ்துவுக்கு முன் கி.மு. என்றும், கிறிஸ்துவுக்குப்பின் நடந்தவற்றை கி.பி. என்றும் சொல்லுகிறோம்.

இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார், இருக்கிறார். சிலர் அவரை சிறந்ததொரு மதப்போதகர் என்று நினைக்கிறார்கள். ஆனால், உண்மையோடு அந்த ஆலோசனைகள் பொருந்துவதில்லை.

(அ) அவர் உரிமைபாராட்டுபவை

இயேசு, தேவனுடைய விசித்திரமான குமாரன், தேவனோடு ஒப்பிடப்பட்டவர். பாவங்களை மன்னிக்கும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். ஒருநாளில் இந்த உலகத்தை நியாயந்தீர்ப்பேன் என்று சொல்லியிருக்கிறார். இந்த வாழ்க்கையில் நாம் எப்படி அவருக்கு பதிலளிக்கிறோம் என்பது அப்போது கணக்கில் வரும்.

சி.எஸ். லிவிஸ் குறிப்பிடுகிறார், 'ஒரு மனிதன் சாதாரண மனிதனாக இருந்து, இயேசு சொன்ன வார்த்தைகளை உரைத்து, அவன் வல்லமையான சன்மார்க்க போதகரும் அல்லவென்று சொன்னால், ஒன்று - அவன் புத்திகுறைந்தவனாக இருக்க வேண்டும், அல்லது நரகத்தின் பிசாசாக இருக்க வேண்டும். உங்கள் தீர்மானத்தை நீங்கள்தான் எடுக்கவேண்டும். இயேசு தேவனுடைய குமாரராக இருந்தார், இருக்கிறார். அதை அங்கீகரியுங்கள், இல்லையேல் புத்திகெட்டவன் என்றோ,

பொல்லாதவன் என்றோ முடிவெடுங்கள்' சி.எஸ். லிவிஸ், மேலும் சொல்கிறார். 'அவர் வல்லமையான மானிடபோதகர் என்று சொந்தம் பாராட்டும் மதிகேடான எண்ணமுடையவர்களாய் இருக்கவேண்டாம். அதை அவர் வெளிப்படுத்தவில்லை, வெளிப்படுத்த விரும்பவும் இல்லை'.

(ஆ) அவர் குணம்

தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளாத எண்ணற்றோர், இயேசு சுயநலமற்ற வாழ்விற்கு சிறந்த எடுத்துக்காட்டு என்கிறார்கள். கிறிஸ்தவரான டாஸ்டாவஸ்கீ கூறுகிறார். 'இயேசுவைவிட அன்பான, ஆழமான, மிகுந்த கருணையுடைய, சிறந்த நபர் வேறுயாரும் இல்லை என்று நம்புகிறேன். அவரைப்போல யாரும் இருக்கவில்லை, இனிமேலும் அவரைப்போல யாரும் இருக்கவும் முடியாது என்று பொறாமையான அன்போடு எனக்கு நானே சொல்லிக்கொள்கிறேன்.

அவருடைய போதனைகளைப் பொறுத்தவரை, மனித உதடுகள் உதிர்த்த மிகத்தூய்மையான மற்றும் சிறந்த சொற்கள் என்று பொதுவாக எல்லாரும் ஒப்புக்கொள்வது தெரிகிறது.

மேலும் சி.எஸ். லிவிஸ் அப்புத்தகத்தில் இயேசு ஒரு குழப்பவாதியோ, பொல்லாத நோக்கங்கொண்டவரோ அல்ல... அவர் கடவுளின் ஒரே குமாரனே என்பதையும், அப்படியே அவர் வந்தார், இன்றும் அப்படி இருக்கிறார் என்றும் தான் சொல்லவந்ததைத் தெள்ளத்தெளிவாக இயேசு கூறியிருக்கிறார் என்று விளக்குகிறார்.

(இ) அவர் சாவை வென்றவர்

அவருடைய உடல் உயிர்த்தெழுந்ததற்கான தெளிவான சான்றுகள் வலுவாகவே உள்ளன. இயேசுவின் சீடர்கள் அவருடைய கல்லறைக்கு சென்றபோது அவருடைய கட்டுகள் அவிழ்க்கப்பட்டுக் கிடப்பதையும், இயேசுவின் உடல் அங்கு இல்லாததையும் கண்டார்கள்.

அடுத்த 6 வாரங்களுக்குள் 500 பேருக்கும் மேலான மக்கள் அவரைக் கண்டனர். சீஷர்களுடைய வாழ்க்கை முற்றிலும் மாற்றிப் போடப்பட்டது. கிறிஸ்தவ சபைகள் தோன்றின, மகத்தான வேகத்தில் வளர்ந்து பெருகின.

இங்கிலாந்தின் முன்னாள் முக்கிய நீதிபதி, லார்ஃடு டார்லிங், இயேசுவின் உயிர்த்தெழுதலைப்பற்றி இவ்வாறு கூறினார். 'உயிருள்ள உண்மை நிலைத்திருக்கிறது, எண்ணற்ற ஆதாரங்கள் உடையதாயும், நல்லதும், கெட்டதும் உடையதாயும், உண்மையுள்ளதாயும், இயல்பானவையாகவும், உலகின் எந்த நியாயவிசாரணைக்குழுவும் மறுக்காமல் உண்மையென



தீர்க்கக்கூடியதாயும் இருக்கும். இயேசு உயிர்த்தெழுந்த வரலாறு இதற்கு ஒரு திருப்திகரமான விளக்கம் இயேசு நிச்சயமாகவே மரித்தோரிலிருந்து உயிர்தெழுந்தார். ஆகையால், அவர் தேவகுமாரனாய் இன்றும் இருக்கிறார்.

அவர் ஏன் வந்தார்?

தன் பிறப்பை தேர்ந்தெடுத்த ஒரே நபர் இயேசு. மரணத்தைத் தேர்ந்தெடுத்த வெகுசிலரில் அவரும் ஒருவர். நமக்காக உயிரைத் தருவதற்காகவே வந்தார் என்று அவர் சொல்லியிருக்கிறார். அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் (மாற்கு10.45)

கொல்லப்படுவதற்கு, கொடூரமான வழிகளில் ஒன்று சிலுவைமரணம் என்று நாம் அறிவோம். சிசரோ விளக்குகிறார் 'சித்திரவதைகளில் கொடூரமானதும், பயங்கரமுமானது சிலுவையில் மரிப்பது' என்று. இரும்பும், எலும்புகளும் பொறிக்கப்பட்ட வார்களினால், இயேசு பலமுறை அடிக்கப்பட்டார். 'பாதிக்கப்பட்டவரின் இரத்தக்குழாய்கள் வெளியே வரும், தசைநரம்புகள் மற்றும் வயிற்றுப்பகுதிகள் வெளியரங்கமாய் காணப்படும்' என்று இயூசீபியஸ் என்னும் 3வது நூற்றாண்டு வரலாற்று நிபுணர் கூறியிருக்கிறார்.

தான் கீழே விழுமட்டும் 6 அடி சிலுவையை இயேசு சுமந்தார். சிலுவையில் அறையப்படும் இடத்திற்கு அவர் கொண்டு செல்லப்பட்டவுடன், 6 அங்குலமான ஆணிகள் அவர் கால்களில் கைகளில் அறையப்பட்டது. தாங்கமுடியாத வலியினால் பல மணிநேரம் சிலுவையில் தொங்கவிடப்பட்டார்.

எனினும், புதிய ஏற்பாட்டில், இயேசு அனுபவித்த சரீர மற்றும் மன சஞ்சலம், வேதனையை காட்டிலும் அவர் தேவனோடு வைத்திருந்த உறவு துண்டிக்கப்பட்டதே அவருக்கு மிகுந்த வேதனையளித்ததது என்று தெளிவாக எடுத்துரைக்கிறது.

அவர் ஏன் இறந்தார்?

நமக்காக இறந்தார் என்று இயேசு கூறினார். நமக்காக என்பது நமக்கு பதிலாக என்று பொருள் கொண்டது. அவர் நம்மை நேசித்ததால் அப்படி செய்தார். நாம் செய்த குற்றங்களுக்கான தண்டனைகளை நாம் செலுத்தகூடாது என்று அவற்றை தன்மேல் ஏற்றுக்கொண்டார். அவர் அதை உங்களுக்கும் செய்தார், எனக்கும் செய்தார். சிலுவையில் கூறுனார். 'உங்களுடைய எல்லாவற்றையும் என் மேல் ஏற்றுக் கொள்கிறேன் என்றார் நீங்களோ, நானோ இந்த உலகத்தில் தனிமனிதனாக வாழ்வோமேயானால் நமக்கும் இதை செய்திருப்பார். தேவகுமாரன் என்னை நேசித்தபடியால், தன்னையே எனக்கு கொடுத்தார் என்று பவுல் எழுதுகிறார் (கலாத்தியர் 2.20).

நம் பேரில் அவர் வைத்திருந்த அன்பின் நிமித்தம் அவர் தன் ஜீவனையே பரிகாரமாக நமக்கென்று கொடுத்தார். பரிகாரம் என்கிற வார்த்தை அடிமைகளை வியாபாரஞ்செய்யும் தொழிலிருந்து எடுக்கப்பட்டது. ஒரு கரிசனையுள்ள நபர் ஒரு அடிமையை வாங்கியபின், அவனை விடுதலை செய்வார். ஆனால் முதலாவது அவனை வாங்குவதற்கு பரிகாரப்பணம் செலுத்த வேண்டும். நம்மை விடுதலையாக்க இயேசு பரிகாரப்பணமாகிய இரத்தத்தை சிலுவையில் சிந்தினார்.

எதிலிருந்து விடுதலை?

(அ) குற்றவுணர்விலிருந்து விடுதலை

நாம் குற்றமுள்ளவர்களாயும் இருக்கலாம், குற்றமில்லாதவர்களாயும் இருக்கலாம், ஆனால் தேவனுடைய விதிகளை சிந்தனையிலும், வார்த்தையிலும், நடக்கையிலும் மீறினதால் அவருக்கு முன்பாக குற்றமுள்ளவர்களாய் இருக்கிறோம். குற்றம் புரிந்த ஒருவருக்கு எப்படி தண்டனை விதிக்கப்படுகிறதோ அதேபோல் கடவுளின் நீதியை

மீறுபவருக்கு தண்டனை உண்டு. பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6.23). நாம் செய்யும் தவறான காரியங்களின் விளைவு நம் ஆவியின் மரணம். கடவுளிடமிருந்து நிரந்தரமாக துண்டிக்கப்படுகிறோம். நாம் எல்லோரும் அந்த தண்டனைக்கு பாத்திரமானவர்களாக இருக்கிறோம். இயேசு சிலுவையில் நமக்கு வரவேண்டிய தண்டனையை தம்மேல் ஏற்றுக்கொண்டதினிமித்தம் நமக்கு பரிபூரண மன்னிப்பையும் அதோடு நம் குற்றங்களையும் போக்கிவிட்டார்.

(ஆ) அடிமைத்தனத்திலிருந்து விடுதலை.

இயேசு சொன்னார், பாவஞ்செய்கிற எவனும் பாவத்திற்கு அடிமை (யோவான் 8.24). அந்த அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுவிக்க இயேசு இறந்தார். சிலுவையில் அடிமைத்தனத்தின் வல்லமை முறிக்கப்பட்டது. நாம் அடிக்கடி பாவத்தில் விழுந்துபோகிறவர்களாக இருந்தாலும், இயேசு நம்மை விடுவிக்கும்போது பாவ அடிமைத்தனத்தின் வல்லமையிலிருந்து நாம் உடைக்கப்படுகிறோம். ஆகையால்தான், இயேசு 'குமாரன் உங்களை விடுவித்தால், மெய்யாகவே விடுதலையாவீர்கள்' என்று கூறியிருக்கிறார். (யோவான் 8.36)

(இ) பயத்திலிருந்து விடுதலை

இயேசு வந்தது எதற்காக என்றால் 'மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும் வாழ்நாளெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்கு உள்ளானவர்கள் யாவரையும் விடுவிக்கும்படிக்கு அப்படியானார்' (எபிரெயர் 2.14-15) நாம் ஒருக்காலும் மரணத்தை குறித்து பயப்பட வேண்டியது இல்லை.

இயேசுவினால் விடுவிக்கப்பட்டவர்களுக்கு, மரணம் முடிவு அல்ல. மாறாக, அது பரலோகத்துக்குச் செல்லும் வாசல். அங்கு பாவத்தின் அறிகுறியுங்கூட இருக்காது. இயேசு நம்மை மரணபயத்திலிருந்து விடுவித்தபோது, மற்ற எல்லாவித பயங்களிலுமிருந்தும் நம்மை விடுவித்தார்.

எதற்காக விடுதலை?

சரீரத்தில் இயேசு இப்பூமியில் இல்லை, ஆனால் இவர் நம்மை தனியே விட்டுவிடவில்லை, அவருடைய பரிசுத்த ஆவியை நமக்கு அனுப்பியிருக்கிறார். அவருடைய ஆவியானவர் நமக்குள் வாழ்கிறபடியால், புதுவிடுதலையை கொடுக்கிறார்.

(அ) தேவனை அறிய விடுதலை

நாம் செய்கிற தவறுகளால், தேவனுக்கும் நமக்கும் இடையே தடைச்சுவர் ஏற்படுகிறது. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் 'உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினையை உண்டாக்குகிறது' (ஏசாயா 59:2). இயேசு சிலுவையில் மரித்தபோது தேவனுக்கும் நமக்கும் இடையே இருந்த தடையை விலக்கிப்போட்டார். அதன் விளைவாக நாம், நம் படைப்பாளரோடு தொடர்புகொள்ள முடிகிறது. அவர் மகன்களும், மகள்களுமானோம். பரிசுத்த ஆவியும் அந்த உறவை உறுதிப்படுத்துகிறது. ஜெபிக்கவும், தேவனுடைய வசனத்தை (வேதாகமம்) புரிந்துகொள்ளவும் உதவுகிறது.

(ஆ) நேசிப்பதற்கு விடுதலை.

'அவர் முன்பு நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம்'. (யோவான்.4.19) நாம் சிலுவையை பார்க்கும்போது தேவனுடைய அன்பை அனுபவிக்கிறோம். தேவ ஆவி நமக்குள் வசிக்கும்போது அந்த அன்பை அனுபவிக்கிறோம். அப்படி செய்யும்போது தேவனுக்கும், மனிதருக்கும் ஒரு புது அன்பை பெற்றுக்கொள்கிறோம். அன்பின் வாழ்க்கை வாழ்வதற்காகவே விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம். நம்முடைய வாழ்வை மையமாகக் கொண்டு வாழ்வதற்காக அல்ல. இயேசுவிற்கு அன்போடு பணிவிடை செய்யவும், மற்றவர்களை நேசிக்கவும், உதவவுந்தான்.

(இ) மாற்றம் அடைவதற்கு விடுதலை

சிலர் சொல்லுவார்கள், நீ எப்படி இருக்கிறாயோ அப்படியேதான் இருப்பாய், நீ மாறமாட்டாய் என்று. நற்செய்தி என்னவென்றால் பரிசுத்த ஆவியின் உதவியுடன் நீ மாறலாம். நாம் வாழவேண்டும் என்ற நம்முடைய

ஆழமான ஏக்கத்துக்கேற்ப வாழ பரிசுத்த ஆவியானது நமக்கு விடுதலைக் கொடுக்கிறது. பவுல் சொல்லுகிறார், 'ஆவியின் கனியோ அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், நற்குணம்(கலாத்தியர் 5.22) தேவ ஆவியானது நமக்குள் வந்து வாழும்படியாக நாம் கேட்கும்போது இந்த அற்புதமான குணாதிசயங்கள் நம் வாழ்க்கையில் வளரத் தொடங்குகின்றன.

ஏன் கூடாது?

ஆகையால் கிறிஸ்து இயேசுவின்மூலம் தேவன் நமக்கு பாவமன்னிப்பையும், விடுதலையையும், நமக்குள் வாழ பரிசுத்த ஆவியையும் கொடுக்க விரும்புகிறார். இவை, தேவனிடத்திலிருந்து வருகிற ஈவு நமக்கு யாராவது ஒரு பரிசு கொடுத்தால் அதை நாம் பெற்றுக்கொண்டு, திறந்துபார்த்து, அனுபவிப்போம். அது நமக்கு வேண்டாம் என்றால், இல்லை நன்றி, என்று சொல்லிவிடுவோம் தேவன் கொடுக்கிற பரிசுகளை அநேகர் வேண்டாம் என்று சாக்குபோக்கு சொல்லி தள்ளிவிடுகின்றன. இது பரிதாபத்திற்குரியது.



இதோ சில சாக்குபோக்குகள்.

(அ) எனக்கு கடவுள் தேவை இல்லை

இதை மக்கள் சொல்லும்போது கடவுள் இல்லாமல் நான் மகிழ்ச்சியுடனே இருக்கிறேன் என்பதை பொதுவாக சுட்டிக்காட்டுகிறார்கள். தங்களுடைய முக்கியமான தேவை சந்தோஷம் அல்ல, பாவமன்னிப்பு என்பதை உணரத் தவறுகிறார்கள். எனக்கு மன்னிப்பு தேவை இல்லை என்று மிகுந்த பெருமையுடையவர் தான் சொல்லுவார்.

நம் எல்லாருக்கும் மன்னிப்பு அவசியம். அது இல்லை என்றால், நாம் உண்மையில் பெரிய பிரச்சனையில் இருக்கிறோம் என்றே அர்த்தம். தேவன் நம்முடைய அன்பான பிதா மட்டுமல்ல... நீதிதவறாத நியாயாதிபதியும் ஆவார்.

இயேசு நமக்காக சிலுவையில் மரித்தார் என்று நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும், இல்லையேல், ஒருநாள் நாம் செய்த தவறுகளுக்கான தண்டனையை அனுபவிக்க வேண்டும்.

(ஆ) விட்டுக்கொடுக்க வேண்டியவை அநேகம்

இயேசுவின்மூலம் தேவனோடு நாம் உறவுவைத்து கொள்ள நம்முடைய வாழக்கையில் தவறான காரியங்களை நாம் விட்டுவிட வேண்டும் என்று தம் விரலை காட்டி, பல சமயங்களில் நம்மை எச்சரிப்பார்.

ஆனால், நாம் நினைவில் கொள்ள வேண்டியவை



- ❑ தேவன் நம்மை நேசிக்கிறார். நமக்கு பாதிப்பை கொண்டுவருகிற காரியங்களை மட்டுமே விலக்கிவிட கேட்கிறார். என் பிள்ளைகள் கத்தியை வைத்து விளையாடிக் கொண்டிருந்தால், நிறுத்துங்கள் என்று சொல்லுவேன். அவர்கள் சந்தோஷத்தோடு விளையாடுவதை நிறுத்துவதற்காக அல்லாமல், அவர்கள் தங்களை காயப்படுத்திக்கொள்வார்கள் என்பதற்காக.



- ❑ நாம் பெற்றுக்கொள்வது, நாம் விட்டுக்கொடுப்பதை காட்டிலும், மிக அதிகம். கிறிஸ்தவனாக மாற நாம் செலுத்துகிற கிரயத்தைக் காட்டிலும் கிறிஸ்தவனாக மாறாமல் இருந்து செலுத்தக்கூடிய கிரயம் அதிகம்.
- ❑ நமக்காக இயேசு சிலுவையில் உயிரைக்கொடுக்கும்படி தன்னை விட்டுகொடுத்ததை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் விட்டு கொடுத்தவை ஒன்றுமே இல்லை

(இ) ஏதாவது சிக்கல் இருக்கும்?



வாழ்க்கையில் கிரயம் கொடுக்காமல் நமக்கு இலவசமாய் கிடைக்கக்கூடியது உண்டு என்பதை மக்கள் நம்ப மறுக்கிறார்கள். இது எல்லாம் எளிதாக தோற்றமளிக்கிறது. ஆகையில் இதில் சிக்கல் ஏதாவது இருக்கலாம் என்று எண்ணுகிறார்கள். ஆனாலும் இவையெல்லாம் நமக்கு கிரயம் செலுத்தாது பெற்றுக் கொள்கிறவைகளாக இருந்தாலும், இயேசுவுக்கு இவை இலவசமாக வந்தவை அல்ல. தன் சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தை கிரயம் செலுத்திப் பெற்றார். இவை நமக்கு எளிது, ஆனால் அவருக்கு எளிது அல்ல.

(ஈ) நான் நல்லவன் அல்ல

நாம் யாரும் நல்லவர்கள் அல்லர், நாம் கடவுளுக்கு நம்மை நல்லவர்களாக மாற்றிக்கொள்ளவும் முடியாது. ஆனால் அதற்காகத்தான் இயேசு வந்தார். நாம் என்ன தவறுகள் செய்தவர்களானாலும், நம்முடைய வாழ்க்கையை நாம் சீர்குலைத்திருந்தாலும் நாம் இருக்கிறவண்ணம் நம்மை ஏற்றுக்கொள்ள கடவுளால் மட்டுமே இயலும்.

(உ) அவ்வாறு தொடர்ச்சியாக, நான் செய்துகொண்டிருக்க இயலாது

நாம் தொடர்ந்து செய்துகொண்டிருக்க இயலாது, என்று நாம் நினைப்பது சரிதான். நம்மால் முடியாது, ஆனால் நமக்குள் வந்து தங்கியிருக்கிற தேவ ஆவியானவர், கிறிஸ்தவர்களாகிய நமக்கு வல்லமையையும், பெலனையும் கொடுக்கிறார்.

(ஊ) நான் பிறகு செய்கிறேன்.

இது பொதுவான சாக்குபோக்கு. சிலர் சொல்கிறார்கள், ‘அவை உண்மை என்று தெரியும், ஆனால் இப்போது நான் ஆயத்தமாக இல்லை‘ என்று நிராகரித்துவிடுவர். வேண்டாம் என்று எத்தனை நாட்கள் தள்ளிவைக்கிறோமோ, அவ்வளவிற்கு அவ்வளவு கடினமாகிவிடுகிறது. அதோடு நாம் இழந்தவையும் அதிகரிக்கின்றன. நமக்கு மறுவாய்ப்பு கிட்டுமா? என்று நாம் அறியோம். இவற்றைக் குறித்து எனக்கு ஒரு வருத்தம்/ இவற்றை நான் முன்பே பெறவில்லையே என்பதுதான்.

நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

கடவுள் கொடுக்கிற பரிசுகளை பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும் என்று புதிய ஏற்பாடு தெளிவாக உரைக்கிறது. இதுவொரு விசுவாசச்செயல் என்று யோவான் எழுதுகிறார், 'தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்'. (யோவான் 3:16) விசுவாசிப்பது நம்பிக்கையின் செயல். இயேசுவைக்குறித்து நாம் அறிந்த அனைத்தையும் மையமாகக் கொண்டுள்ளது. அது குருட்டு நம்பிக்கை அல்ல. நம்முடைய விசுவாசத்தை ஒரு நபர்மேல் வைப்பது சிலவகையில், ஒரு மணப்பெண் அல்லது மணமகன் தன் திருமணநாளில் ஆம் என்று சொல்லி அடியெடுத்து வைப்பது போன்றதாகும்.

இப்படி மக்கள் எடுத்துவைக்கும் விசுவாசப்படிகளை பல கோணங்களில் விவரிக்கலாம். ஆனால் இப்போது நீங்கள் இந்த விசுவாசப்படியை எடுத்துவைக்க ஒரு வழியை விளக்க விரும்புகிறேன். அதை 3 சிறிய சொற்களில் சுருங்கச் சொல்லலாம்.

(அ) மன்னித்துவிடும்...

உங்கள் வாழ்க்கையில் தவறு என்று நீங்கள் அறிகிற காரியங்களை விட்டுத் திரும்பி, நீங்கள் செய்த எல்லா தவறுகளையும் மன்னிக்கும்படி, ஆண்டவரை வேண்டிக்கொள்ள வேண்டும். இதைத்தான் மனந்திரும்புதல் என்று வேதம் சொல்கிறது.

(ஆ) உமக்கு நன்றி, ஐயா...

இயேசு நமக்காக உயிரைத்தந்தார் என்று நாம் விசுவாசிக்கிறோம். உங்களுக்காக அவர் இறந்ததற்காக அவருக்கு நன்றிசெலுத்த வேண்டும், அத்தோடு மன்னிப்பு என்னும் கிரயமில்லாத வெகுமதிக்காகவும் நன்றிகளை ஒப்புவிக்க வேண்டும்.

(இ) தயவுசெய்து...

தேவன் வலுக்கட்டாயமாக அவருடைய வழிகளை நமக்கு புகட்டுவதில்லை. அவருடைய வெகுமதிகளை நீங்கள் ஏற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வந்து தங்கும்படி அவரை வரவழைக்க வேண்டும். இந்த மூன்று காரியங்களையும் நீங்கள் செய்ய ஆயத்தமாக இருந்து தேவனோடு நல்ல உறவு வைத்துக்கொள்ள நீங்கள் விரும்பினால், அந்த உறவை தொடக்கக் கீழ்கண்ட சிறிய ஜெபத்தை ஜெபிக்கலாம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே,

என் வாழ்க்கையில் நான் செய்த தவறுகளுக்காக வருந்துகிறேன். (உங்கள் மனசாட்சியில் குறிப்பிட்ட சில காரியங்கள் இருந்தால், அதற்கு மன்னிப்பு கேட்க சில வினாடிகள் எடுத்துக்கொள்ளுங்கள்) தயவுசெய்து என்னை மன்னித்துவிடும். தவறு என்று எனக்கு தெரிகிற எல்லாவற்றையும் விட்டுவிடுகிறேன். நான் மன்னிக்கப்படும்படியாகவும், விடுவிக்கப்படும் படியாகவும் நீர் எனக்காக சிலுவையில் உயிரைக் கொடுத்ததற்காக உமக்கு நன்றி, ஐயா... இப்போது நான் அந்த வெகுமதியை பெற்றுக்கொள்கிறேன். தயவுசெய்து உம்முடைய பரிசுத்த ஆவியின் மூலமாய் என் வாழ்க்கைக்குள் வந்து நிரந்தரமாக தங்கியிரும்,

என்றென்றுமாக...

ஆண்டவராகிய இயேசுவே, உமக்கு நன்றி. ஆமென்!

இப்போது என்ன?

(1) எவரிடமேனும் சொல்லுங்கள்

நீங்கள் எடுத்த தீர்மானத்தைக் கோடிட்டுக் காட்டும்வகையில் இதை நீங்கள் யாரிடமாவது சொல்லும்போதுதான், அது உங்கள் வாழ்க்கையில் உண்மையாகும். நீங்கள் சொல்வதைக் கேட்டு மகிழ்கிறவரிடம் முதலாவது நீங்கள் சொல்லத்தொடங்கினால், அதுவே மேலானது.

(2) வேதம் வாசியுங்கள்:

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசங்கொண்டு, அவரை ஏற்றுக்கொள்கிறவர்கள், அவருடைய பிள்ளைகளாகிவிடுகிறார்கள். (யோவான் 1.12)

அவர் நம்முடைய பரலோக தந்தை. மற்ற தந்தையரைப்போலவே அவரும் நம்மோடு நெருங்கிய உறவு வைத்துக்கொள்ள விரும்புகிறார். அவருக்கு செவிகொடுக்கும்போது இந்த உறவை வளர்க்கிறோம். (முதலில் வேதத்தின்மூலம்) மற்றும், அவரோடு நாம் ஜெபத்தில் பேசும்போது... வேதம், தேவனுடைய வசனம். முதலாவதாக, யோவான் எழுதின சுவிசேஷத்திலிருந்து சில வசனங்களை ஒவ்வொரு நாளும் வாசிப்பது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

(3) தேவனோடு ஒவ்வொருநாளும் பேசத்தொடங்குங்கள்

பின்வருபவை எனக்கு மிகவும் பயனுள்ளவையாய் இருக்கும்.

A - Adoration (உயர்த்துதல்) தேவன் உயர்ந்தவர் மற்றும் அவர் நமக்கு செய்தவற்றிற்காக அவரை துதிப்பது.

C - Confession (அறிக்கையிடுதல்) ஏதேனும் தவறுசெய்திருந்தால் நம்மை மன்னிக்கும்படி தேவனை வேண்டிக்கொள்வது.

T - Thanks giving (நன்றிசொல்லுதல்) உடல்நலம், குடும்பம் மற்றும் நண்பர்களுக்காக தேவனுக்கு நன்றிசொல்வது.

S - Supplication (வேண்டுதல்) நமக்காக ஜெபிப்பது, நண்பர்களுக்காக ஜெபிப்பது, மற்றவர்களுக்காக ஜெபிப்பது.

(4) உயிருள்ள ஒரு சபையில் உறுப்பினராக சேர்வது.

கிறிஸ்தவ குழுவாக, ஒன்றுசேர்ந்து தேவனை ஆராதித்து, அவருடைய வார்த்தைகளை கேட்டு, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி, நண்பர்களை சேர்த்துக்கொள்வது மிகமுக்கியம். சபை உண்மையாகவே உற்சாகமுள்ள இடமாக இருக்கும்.

நான் முதன்முதலில் 15ஆம் பக்கத்தில், பிப்ரவரி 16, 1974 ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஜெபத்தை ஜெபித்தேன். என் வாழ்க்கையை அது

மாற்றியமைத்தது. இதுவரை நான் செய்ததில் மிக அருமையான மற்றும் மிகமுக்கியமான காரியம் அது. உங்களுக்கும் அதேபோல் இருக்கும் என்று நம்புகிறேன்.

மேலும் வாசிப்பதற்கு: நிக்கி ஃகம்பெல் எழுதிய 'வாழ்க்கையின் கேள்விகள்' புத்தகம், இன்றைய வாழ்க்கைக்கு இயேசு ஏற்றவர் என்பதை பெரிதும் விவரிக்கிற புத்தகம் இது.

இயேசு ஏன்?

எண்ணற்றோர் இந்நாட்களில் இயேசுவை குறித்து குழம்பிப்போய் இருக்கின்றனர்.

2000 ஆண்டுகளுக்கு முன்பு பிறந்த நபரை குறித்து ஏன் இவ்வளவு அக்கறை?

இயேசுவை குறித்து ஏன் இத்தனை மக்கள் கூறுகிறார்கள்?

அவர் நமக்கு ஏன் தேவை? அவர் ஏன் வந்தார்? ஏன் மரித்தார்?

அதை கண்டுபிடிக்க ஏன் அக்கறைகொள்ள வேண்டும்?

இயேசுவைப் பற்றிக் கூறுவதில் எனக்குத் தெரிந்தவரையிலும், மிகவும் தெளிவான, அதிகமான எடுத்துக்காட்டு மற்றும் உவமையளித்து, சுருக்கமாகக் கூறுவது, பெரிய சவால்களோடு கூடியது - மைக்கேல் கிரீன்



நிக்கி கம்பெல், வழக்கறிஞராக பணியாற்றியவர். தற்போது தூய திரித்துவ பிராம்ப்டனில் பிரதிகுருவாக பணிபுரிகிறார்.

கிறிஸ்தவ நம்பிக்கையை குறித்து மேலும் அறிய ஆவலுள்ளவர்களுக்கு நிக்கி கம்பெல் வெளியிட்டுள்ள மற்ற நூல்கள் "ஆல்ஃபா-வாழ்க்கையின் கேள்விகள்" மற்றும் "வாழ்க்கையில் அவ்வப்போது எழும்பும் கேள்விகளுக்கு தீர்வு".

"ஆல்ஃபா-வாழ்க்கையின் கேள்விகள்" - இதில் ஆல்ஃபா பாடப்பயிற்சியின் செய்திகள் அடங்கியுள்ளது. கிறிஸ்துவ நம்பிக்கைக்கு நடைமுறை அறிமுகம். இது இங்கிலாந்து முழுவதிலும் உலகமெங்கிலும் நடந்துகொண்டிருக்கிறது. உங்கள் அருகாமையில் நடக்கும் பாடப்பயிற்சியின் விவரங்களுக்கு

www.alpha.org.my

Alpha

ISBN 978-981-08-8149-8

© Alpha International
Published by AAP Publishing Pte Ltd